**கொக்குவில் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் (கனடா)**
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (CANADA)**
**2015**

# 12 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

## பேச்சுப் போட்டி

## கல்வியின் சிறப்பு

செல்வங்களுள் எல்லாம் மிகச்சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அது ஈடுஇணை இல்லாச் செல்வம். அதனால் தான் வள்ளுவர் “ கேடில் விழுச்செல்வம் கல்வி” என்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே அதன் பொருள். கல்வி அழிவு இல்லாதது மட்டுமல்ல என்றும் நிலைத்து நிற்கக்கூடியது. பிற செல்வங்கள் அழிந்துவிடக் கூடியன. ஒருவரிடம் உள்ள கல்வி வெள்ளத்தினால் அழிந்துவிடாது, நெருப்பினால் வேகாது, கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது. கல்வி மற்றவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்க கொடுப்பவரிடத்தே கூடிச் செல்லுமே அன்றி அது குறைவடைய மாட்டாது.

கல்வி சிறப்புடையது. கல்வி கற்றோரும் சிறப்புடையோராவர். கற்றவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. கற்றவர்கள் மற்றவர்களால் போற்றப்படுவர். ஒரு சபையில் முன்னிலையில் வைக்கப்படுபவர்களும் கற்றவர்களே. பிற செல்வங்களும் நமக்குத் தேவையானவையே. கல்வி இல்லாவிடின் பிறசெல்வங்களால் பயனேதுமில்லை. பிற செல்வங்களைத் தேடவும், அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தவும் கல்வியே உதவுகின்றது.

கல்விச் செல்வத்தை இளமையிலேயே பெறுதல் நன்று. “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என ஒளவை மூதாட்டி கூறியுள்ளார். எனவே நாமும் இளமையிலேயே கல்விச் செல்வத்தைப் பெற்று சிறப்புடன் வாழ்வோம்.

**********